# தியாக தீபம்



அமரர்.

## அழகரெட்ணம் திருச்செல்வம் (ஐங்கரன்)

அவர்களின் நினைவுமலர்

09.07.2018

(முன்னாள் கூட்டுறவு சங்க முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்
ஒளி விளக்காய் ஒளியூட்டி
என்றும் எம் மக்களின்
மனங்களில் நினைவலைகளால்
நிலைத்து நிற்கும் உறவாய்
முன்னை நாள்தனில்
நாடு நலம் பெற நன் அமைப்பிலிருந்து
என்றும் உயரிய நோக்கினை
ஏற்று இன்று எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி
இறைபதம் எய்திய
எமது அன்புத் தியாகத்திற்கு
இந்நினைவு மாலையை
தியாக தீபச்சுடராக
ஏற்றுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றி
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவஞ்சலி



தாய் மடியில்
12-04-1963

தாய் மண்ணில்
09-06-2018

அமரர்

## அழகரெட்ணம் திருச்செல்வம் (ஐங்கரன்)

### திதி வெண்பா

நிகழும் விளம்பி வருடம் ஒன்பதாம் நாள்
பார் புகழ் வாழ்ந்த பணியாளன் – ஐங்கரன்
என்றழைக்கும் அற்புதப் பிறவியாம் திருச்செல்வம்
பூவுலகைத் தான் மறந்து சனிக்கிழமை தசமி திதிதனில்
வானுலுகு புகுந்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளில்லை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகும்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா னுர்வுமாகித் தோன்றி பொருளுமாகிப்
மேதியா வேகமாகிப் பொண்ணுமா யானுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். அழகரெட்ணம் திருச்செல்வம் அவர்களின் வாழ்வியல் சரிதம்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்காபுரிதனில் சிவபக்தன் இராவணேஸ்வரனால் பூசிக்கப்பட்ட தென்கைலாயத்தின் திருக்கோணமலையில் இயற்கை எழில் கொஞ்சும் மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலப்பண்மையை வெளிப்படுத்தும் உவர்மலைப் பகுதியில் கண்ணகை அம்மன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கண்ணகைபுரத்தில் தான தருமங்களை தாழாதபடி செய்து மானம் குன்றாது மண் மீது வாழ்ந்த அழகரெட்ணம் இராசமணி தம்பதிகளின் மூத்த செல்வத் திருமகனாக திருச்செல்வம் புவியில் வந்துதித்தார்.

தாய் தந்தை அரவணைப்பில் வளர்ந்து ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த சா.தரம் வரை புனித பிரான்சிஸ் சவேரியர் மகா வித்தியாலயத்திலும் க.பொ.த உயர்தரம் வரை திருக்கோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி யிலும் கற்று மும்மொழிகளிலும் முறையாக தேர்ச்சிபெற்று ஏழே புள்ளிகள் குறைவுபட பல்கலைக்கழகம் சென்று கல்வி பெறும் வாய்ப்பை இழந்தார். இருந்தபோதும் குடும்பத்தில் மூத்தவன் ஆனதால் தொடர்ந்து கல்வி பெற முடியாத நிலையில் தொழிலை நாடினார் .கூட்டுறவு நாட்டின் உயர்வு என்றவகையில் திருக்கோணமலை கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்தார். கூட்டுறவு அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தார். தான் வாழ்ந்து வரும் திருக்கோணமலையின் கிராமிய சூழலில் கடமையாற்ற விரும்பி சல்லி, சாம்பல்தீவு, கன்னியா ஆகிய கிராமங்களில் கூட்டுறவு முகாமையாளராக பணியாற்றினார்.

வாழும் காலத்தில் வரலாற்றைத் தனதாக்கி நீதியுடனும் நேர்மையுடனும் சேவையாற்றினார். திருமண வயது வந்ததும் திருக்கோணமலை 'பெரியகடை' என்றழைக்கப்படும் இடமதனில் பூபாலப்பிள்ளை பாக்கியரெட்ணம் பெற்றெடுத்த தயவான குணமுடைய தயாநிதி என்பாளை தான்விரும்பியே தன் துணையாக்கி பிரணவி, பிரதீபா, என்ற பெண் குழந்தைகள் இருவரையும் பெற்றெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கல்வி கேள்விகளில் கடமையுடன் செயலாற்றி உயர்கல்வி பெறும்வரையும் ஊக்கத்துடனும் ஆசையுடனும் வளர்த்து வந்தார். காலத்தின் கோலம் பலகாலம் இவர்களைப் பிரந்தும் சிலகாலம் இவர்களுடன் சேர்ந்தும் வாழ்ந்து வந்தார். பிறர் பிள்ளைகள் தலைதடவ தன்பிள்ளைகள் தாமே வளரும் என்ற கூற்றிற்கு அமைவாக கஸ்டமான தமிழ்ப்பிரதேசங்களிலும் வாழும் பிள்ளைகளின் கல்வியின் நலனுக்காய் உழைத்தவர் தான் இவர்.

ஆதித் தமிழர் ஆராய்ந்த உண்மைவழி வாழத்தலைப்பட்டவர். ஆண்டது தொண்ணுறில் இனக்கலவரம் தலைவிரித்து தாண்டவமாடிய காலகட்டத்தில் தன்னை அர்ப்பணித்தார் தமிழ் அன்னைக்கு. "எல்லோரும் எல்லாமே பெறவேண்டும்" "இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" "கல்லாதோர் இல்லாத சமூகம் வேண்டும்" "பொல்லாமை நாட்டில் கருக வேண்டும்" நாட்டையும் வீட்டையும் நன்நிலையாக்க குடிமக்கள் நன்மக்களாக வேண்டும் இதை நிலைநாட்ட விருப்பம் கொண்டவராக 90 ஆம் ஆண்டதனில் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார்.

அரசியல் துறைக்கு பொறுப்பாளராக தடம்பதித்தார். தமிழ் அரசியலுக்கு இவர் வழங்கிய சொத்து என்றும் மறையாத சொத்து. வீரன் என்ற பெருமையைப் பறைசாற்றி துறைமுக வாசலிலே திருமலையே திரண்டு வரவேற்று வரலாறு படைத்த மானத்தமிழன். 'ஜங்கரன்' என்னும் நாமத்துடன் அணைத்தெடுத்த தமிழ்ப்பற்றை அயராது தன் வாழ்வில் நிலைப்படுத்திய பெருமகன் தான் ஜங்கரன். தன்குடும்பம் தன் பிள்ளைகள் என்று பாராது தன்மானத்துடன் போராடிய மாவீரன்.

தமிழ்த்தாய் பெற்றெடுத்த அனைத்துள்ளங்களின் உயர்வுக்காய் அரும்பாடுபட்ட செம்மல் தான் ஜங்கரன். ஒரு காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் சகல நிர்வாக அலகுகளையும் தம்வசப்படுத்தி மக்களுக்குச் சேவையாற்றிய மகான். பல பின் தங்கிய தமிழ்க் கிராமங்களின் அபிவிருத்திக்கு கைகொடுத்த அறிவுசார் சான்றோன். கல்வியின் மூலம் உயிர்துடிப்புள்ள தமிழ் உலகைப் படைக்க பாட்டாளிபுரம் போன்ற பழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த கிராமங்களின் ஏட்டுக்கல்வி முதல் பொருளாதார அபிவிருத்தி அரசவேலைவாய்ப்பு வரை ஈட்டிக் கொடுத்த பெருந்தகையான். தன்கென்று எதையும் தன்வாழ்வில் சேர்த்தறியாதவன். உற்ற சகோதரர்களின் உதவிகளையும் பெற்று தமிழ் உலகிற்கு தர்மப் பணிபுரிந்த தகைசான்றோன்.

2009 இல் முள்ளிவாய்க்கால் பிரச்சனை முடிவின்றி இராணுவ வசமான வேளை சரணடைந்து புனர்வாழ்வில் இணைந்து கொண்டார். இரண்டு ஆண்டுகள் சிறைவாசம். துன்பங்கள் சொல்லில் அடங்கா. அடங்காத் தமிழ் மகன் அடங்கி வாழ்வது என்றால் உடலும் உள்ளமும் ஏற்காத விடயமாயிற்று அன்றிலிருந்து உடலை உறுத்தும் நோய் ஆரம்பித்துவிட்டது. எத்தனை மக்களுக்கு புனர்வாழ்வித்த புண்ணியவானுக்கு புனர்வாழ்வு வழங்குவது என்றால் உள்ளம் ஏற்றுக்கொள்ளாத விடயமாயிற்று. மெல்ல மெல்ல சாகடித்தனர். வேண்டாம் இந்த உலகம். பொல்லாமை நிறைந்துவிட்டது. பொறுக்க என்னால் முடியவில்லை என்றவாறு சரிந்தார் ஒருகணம். மறுகணப் பொழுதில் உயிர் பிரிந்தது. உடல்தான் எஞ்சியது.

மரணம் வாழ்வின் முடிவென்று
மக்கள் இங்கே நினைக்கின்றனர்.
மரணம் வாழ்வின் முடிவல்ல
மரணம் வாழ்வின் ஒருபடி
மரித்தபின்னர் பலபடி
இதுவே நியதி...

- குடும்பத்தினர் -

**'பயம்' என்பது பலவீனத்தின் வெளிப்பாடு**
**கோழைத்தனத்தின் தோழன்**
**உறுதியின் எதிரி**
**மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது 'மரணபயம்'**
**இந்த மரணபயத்தினை கொன்று விடுபவன்தான்**
**தன்னை வென்றுவிடுகின்றான்.**
**அவன் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகின்றான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயார் புலம்பல்

ஐயா! ஐயா!! என்றுதான் உனை அழைப்பேன்
அழைக்கின்றேன் காணவில்லை
அன்போடு நீ விரும்பும் உணவுதனை தந்தளிப்பேன்
வரும் வேளை தவமாக காத்திருப்பேன்
எனதருமைச் செல்வமே

எந்நிலை நன்குணர்வாய்
எனது இறுதியை நீ முடிப்பாய் என்று
இலவு காத்த கிளி போல் காத்திருந்தேன்
பஞ்சாய் பறந்தனையே

நான் என் செய்வேன்
எத்தனை துன்பம் வந்தாலும்
நின் அருமை வதனமது வாடியதை
நான் கண்டதில்லை

இரவில் நாம் இருவரும்
இன்புடன் உரையாடி உறங்குவதை
காலனுக்கும் பிடிக்கவில்லை
கவர்ந்துவிட்டான் உன் உயிரை



பாயுடன் படுக்கையில்
பலமிழந்து வாடும் நான்
வேண்டுகின்றேன் - என்னையும்
அழைத்துச் செல்லும்படி...

அன்பான அம்மா

வன்முறைக்கு எதிராக நடத்தப்படுகின்ற வன்முறையும் 'அகிம்சை' தான்,
'வன்முறையை சகித்துகொள்' என்கிற அகிம்சையும் 'வன்முறைதான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

தெய்வமே நீ எங்கே?
தேடுகின்றேன் காணவில்லை
நோய் என்று ஒரு நாளும் சொன்னதில்லை
வந்த நோய் என்னவென்று புரியவில்லை
மனம் கிடந்து துடிக்குது ஐயா!
சென்றவழி சொல்லாமல் மறைந்தது தான் ஏனையா?
அப்பா என்று உங்கள் பிள்ளைகள் கதற
என் உணர்வெல்லாம் கலங்கிப் பரிதவிக்க
சிறகொடிந்த பறவையாய், மாற்றியது ஏனையா?

உயிரெல்லாம் உன் நினைவு! உணர்வெல்லாம் உன் கனவு
மனம் நிறைந்து வாழும் நிலையில்
காலன் அவன் கைப்பட்ட காரணம் தான் என் சொல்வாய்?
சொந்தங்கள் அணைத்தாலும், உறவுகள் தான் உதவினாலும்
நண்பர்கள் தேற்றினாலும், என்
உள்ளத்தின் வெறுமையினை தேற்றுவதற்கு
உங்களையன்றி யார் வருவார்?
கரம்பிடித்த நாட்கள் எல்லாம் மனம் நிறைந்த நாட்களாய்,
சோதனைகள், வேதனைகள், சாதனைகள் என்று
பலபடிகனளை நானும் சேர்ந்தே தாண்டினேன்.
நின்மதியைத் தேடினேன். கிடைக்கவில்லை அது எமக்கு!
ஓய்வு இல்லாது உழைத்த உங்கள்
இறுதி மூச்சை எண்ணி – ஏங்குகின்றேன்.
வியர்வை சிந்த — சுயதொழில் ஒன்றைச் செய்து
எம்மைக் காத்தீர்.
திடீரென காலன் வந்து கவர்ந்து சென்றான்.
கலங்குகின்றோம் நாம்.
என்றும் எமக்கு துணையாக
இருக்க வேண்டுகின்றேன்
உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிராத்திக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புலம்பல்

அப்பா உங்களைப் போல்
அன்புடைய தெய்வம் யாரப்பா?

ஆசையுடன் வரும் வழியைப் பார்த்திருப்போம்
உங்கள் வரவைக் காத்திருப்போம்

துன்பம் அணுகாது எமக்கு துணையாக நின்று
என்றும் வழிகாட்டி இன்புடனே வாழ்ந்து வந்தீர்

உங்கள் முகம் கண்டால் துன்பங்கள் துவண்டோடும்
தங்களின் அன்பான வார்த்தைகள் எமக்கு புத்துயிர்
அளிக்கும் அப்பா.

தங்களின் குரல் கேட்காது
தவிக்கின்றோம் அப்பா?
செய்வது அறியது திகைக்கின்றோம் அப்பா

என்றும் எமக்கு வழிகாட்ட துணையாக இருங்கள் அப்பா
உங்களின் ஆத்மா சாந்தியடைய
பிராத்திக்கின்றோம்.

அன்பு மகள்மார்
தி.பிரணவி,
தி. பிரதீபா



**போராடினாலும் 'சாக வேண்டிவரும்'**
**போராடாவிட்டாலும் 'சாகவேண்டிவரும்'**
**ஆனால் போராடினால்**
**சிறிது வாழ வாய்ப்புண்டு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

அன்போடு நாங்கள் அகமகிழ்ந்து வாழ்ந்திருந்த
இன்பத் திருவீட்டில் இடி ஒன்று வீழ்ந்தது ஏன்?
எங்கள் குடும்பத்தில் மூத்தோனாய் அவதரித்தாய்
அண்ணா என்று நாங்கள் அன்போடு அழைத்திடுவோம்

எம் அனைவருக்கும் அணியாய் நின்றாயே
அனைவரின் மனங்களிலும் இனியவனாய் இடம் பிடித்தாய்
திறமைசேர் திருச்செல்வம் என்னும் நாமமும் - பெற்றாய்
சிறியோரையாய் அறுவர் நாம். சகோதரர்கள் உமைச்சூழ்ந்து
சிரத்யைுடன் உனை நேசித்து, சிரம் தாழ்த்தி வாழ்ந்தோமே

உற்ற இடர் வேளைதனின் உணர்வுடன் அறிவுரைகள் பல தந்தீர்
அறிவியல் மிக்கோனாக அனைவருக்கும் முன் திகழ்ந்தீர்.
திடுக்குற்ற செய்தி கேட்டு திணறியே போனோம் நாம்
செய்வதறியாது — தவிக்கின்றோம் நாம் இங்கு ....
மீண்டும் ஓர் பிறப்புண்டேல் எம்மோடு இருப்பீரோ?

உம் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம் ஆண்டவனை .....



சகோதரர்,
சிறிதரன்,
கோடீஸ்வரன்,
சாந்தன்,
நிமாலினி,
திருமகள்,
கலைச்செல்வன்

**இறந்தவர்களுக்காக அழுபவர்கள் மத்தியில் இருப்பவர்களை விட**
**அழுதவர்களுக்காக இறக்கத் துணிந்தவர்களே**
**உன்னதமானவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றன்னையர் புலம்பல்

தரணியிலே செய்த தவத்தின் திருப்பயனாய்
என் சகோதரிக்கு வந்துதித்தீர் திருச்செல்வமாக
எழுவரின் ஒருவராக ஏழ்மையிலே உழன்றாலும்
தொழும் பண்புதனை – தொட்டிலிலே பெற்றிட்டீர்


கருவிலே திருவுடைய தமிழ்பற்று உன்னைத் தொடர
சிறுவயதில் சேவைக்களம் புகுந்து தமிழ் வளர்த்தாய்
அரிய பல பணிகள் ஆற்றி அறுதல் அடைந்தாய்
அன்ரி என்று எங்களை அன்புடன் அழைப்பாய்
அன்பினால் சுட்டி இழுத்தாயே ஐயா,

எங்கே போவோம் அந்த அன்பிற்கு,
ஏங்குகின்றோம் நின் நினைவுகளால்,
வழிநடத்தும் தலைவா, எங்களைத் தாங்கி நிற்பாய் என்று
எண்ணியல்லே இருந்தோம். இன்று எங்களைவிட்டுப் பிரிந்தாயே!

உதவி என்று வருவோரை உதாசீனம் செய்யாத நின்மனம்
நெஞ்சடைப்பில் நின்மதியானது.
உனதான்மா தெய்வத் திருவடியில்
சாந்தி பெற வேண்டுகின்றோம் நாம் இருவர்.

"இழந்து போனவனுக்கு வாழ்க்கை துயரம்
எழுந்து நடப்பவனுக்கு எல்லாமே மதுரம்"

"துயரம் அழுவதற்காக அல்ல...
எழுவதற்காக"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

அன்பு கொண்ட மைத்துணரே அன்பாக உபசரிப்பீர்
ஆதரவற்ற நேரம் அடைக்கலம் தந்தீர்

எங்கிருந்தோ வந்தோம் ஒரு கூட்டில் சந்தித்தோம்
பழகியது சிறிது காலம்,
பண்புடைய உம் குணங்களை மறக்க பல காலம்

உம் ஆலோசனைகள் எம்மை ஆண்டவைதான்
கோபமின்றி, பாவமின்றி குலம் விளங்க — உம் அறிவுரைகள்
எம்மை வழிப்படுத்தியது.

போய்வாறேன் என்று கூறிப் போனதைதான் நாம் கண்டோம்
உமதாத்மா சாந்திபெற மைத்துணராய்
நாம் நின்று மனம் நெகிழ்ந்து வேண்டுகின்றோம்.

******

## மருமக்கள் புலம்பல்

அன்பினைச் சொரிந்த எங்கள் அன்புமாமா
அருமையாய் இருந்த எங்கள் அன்புமாமா
வன்துயர் நேர்ந்த வேளை — வழிகள் கூறி
இன்புறச் செய்த மாமா எமக்கு துணையாய் இருந்த மாமா?

துன்புற வைத்தது என்ன, துயரினை விளைத்ததென்ன?
எவருக்கும் சுமை தராமல், எங்களைவிட்டுப் பிரிந்தது ஏன்?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

அன்புடன் அழைக்கும் எங்கள் பெரியப்பா
எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு,
கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறுவழியின்றி தவிக்கின்றோம்

ஆலமரம் ஒன்று தீயோடு சிதையுண்டு போனது
விழுதுகள் எல்லாம் கண்ணீர் சிந்தி வழியின்றி நிற்கின்றன
ஒரு ஜீவ நதி வற்றிப் போனது

எங்கள் இதயங்களில் சோகங்கள் முற்றிப்போனது
மலை ஒன்று சாய்ந்து போனது எங்களின்
முகங்களில் கலை இன்று காய்ந்து போனது

உங்களின் உயர்வான எண்ணங்களை பகிர்ந்து கொள்ள
எங்களால் முடியவில்லை அறிகின்றோம் உங்களின் தியாகங்களை
காலன் உங்களைக் கவர்ந்திழுத்தாலும்
காலம் தான் பல ஓடி மறைந்தாலும்
உங்களது நாமம், எங்களிடம் மறையாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்!

நோயுண்ணும் உடல் நலித்தும்,
பேயுண்ணும் உணர்வொழித்தும்,
தாய் நிலத்தின் வேதனையை – எம்
தோள் தாங்காதிருக்கும் பாழ் வாழ்வு
எங்களது என வரலாற்று பதிவேட்டில்
பதிவிக்கப் போகிறோமா?
கூடாது... கூடவே கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரன் என்ற மனிதர்...

கடந்த 09.06.2018 அன்று மாரடைப்பினால் அமரத்துவம் அடைந்த ஐங்கரன் என்று அழைக்கப்படும் திருச்செல்வம் என்ற உயர் மனிதருடன் 2002ம் ஆண்டுதனில் அறிமுகமானேன். இன்றைய காலச் சூழலால் இவரது பிரிவு என்பது திருமலைவாழ் மக்களைப் பொறுத்தளவில் பேரிழப்பாகவே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் இவரது சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளும், அவரால் திருமலை மாவட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளும் அளப்பரியவை.

படித்துப்பட்டம் பெற்று ஒரு அந்தஸ்தை அடைந்துதான் மக்கள் சேவையை ஆற்றலாம் என்கின்ற நிலைப்பாட்டிற்கு அப்பாற்பட்டு ஏழைமக்களின் வாசல்களைத் தேடிச் சென்று மக்கள் பணி ஆற்றியவரே திரு.ஐங்கரன் அவர்கள். குறிப்பாக மூதூரின் கிழக்கிலும், வெருகல், ஈச்சிலம்பற்று போன்ற பிரதேசங்களிலும் பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சிக்காய் உழைத்தவர். பல நெருக்கடியான காலகட்டங்களிற்கூட இங்குள்ள கிராமங்களின் உட்கட்டுமான நடவடிக்கைகள், கல்வி பொருளாதாரம், வேலைவாய்ப்பு என்ற பல்வேறுபட்ட சேவைகள் இவரால் வழங்கப்பட்டமை நினைவுகூறுத்தக்கனவாகும். மூதூரின் கிழக்கே காணப்படும் பல கிராமங்கள் ஓலைக்குடிசைகளோடு காணப்பட்ட அந்த நாட்களில் அங்குள்ள சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காய் பாடுபட்டவர் பாட்டாளிபுரம் கிராமத்தில் முதலாவது அரச வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்ததும் இவரது முயற்சியின் பயனே. அதுமட்டுமல்லாது பலருடைய அரச நியமனங்களுக்கும் வேலைவாய்ப்புக்கும் காரணமாக அமைந்தவர்.

திரு.ஐங்கரன் அவர்கள் ஒரு காலகட்டத்தில் திருக்கோணமலை மாவட்டத்தின் சகல நிருவாக அலகுகளையும், தம்வம்சப்படுத்தி, மக்கள் சேவையாற்றிய ஒரு மகான். இவரது நிருவாகத் திறன் என்பது இவருக்கே உரிய தனிச்சிறப்பாக அமைந்திருந்தது. ஐங்கரன் என்கின்ற திருச்செல்வம் இறுதி யுத்தம் வரையும் தமிழ மண்ணுக்காக உழைத்த ஒரு மாமனிதன். யுத்தத்தின்போது முள்ளிவாய்காலில் இருந்து வெளியேறி இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்து புணர்வாழ்வு அளிக்கப்பட்டு திருக்கோணமலையில் உவர்மலைப் பகுதியில் தனது சகோதரியின் வீட்டில் வசித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்களில் யாரிடமும் கையேந்தி தலைகுனியாது சாதாரண சுயதொழில் ஒன்றினைச் செய்து வியர்வை சிந்தியே தன்னுடைய குடும்பத்தை பாதுகாத்து வந்தார். சகலருடனும் அன்பும், அக்கறையும் உள்ளவராக தோழமையுடன் தன் இனத்தின்மீது அளவு கடந்த பற்றுடையவராகவும், இருந்ததுடன் இறுதி நாட்களில் "சுவடுகள்" தமிழர் அமையத்தின் மூலமாக மக்கள் பணியாற்றியும் வந்துள்ளார்.

அமரத்துவமடைந்த திருச்செல்வம் அவர்களின் குடும்பத்திற்கும், ஜங்கரன் அவர்களின் இனத்துக்கும், இவ்விழப்பு ஈடுசெய்ய முடியாததே! அன்னாரின் பிரிவுத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. த. ஜெயமாலா (காருணியா)
பிரதேச சபை உறுப்பினர்,
கட்டைப்பறிச்சான் வட்டாரம்
மூதூர் பிரதேச சபை

ஒரு ஏழை மகளுக்கு
நல்ல புத்தம் தேவையில்லை
அப்பா அம்மாவின் கஷ்டமான
வாழ்க்கை அனுபவம் ஒன்றே
போதும் வாழ்வதற்கு....

நீ எந்த அளவுக்கு
உயர்ந்தவனாக வேண்டுமென
நினைக்கிறாயோ
அந்த அளவுக்கு கடுமையான
சோதனைகளைக் கடந்து செல்ல
உன்னைத் தயார் செய்து கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழே நீ பகை வென்று முடிசூடவா!

ஒரு மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உள்ள வாழ்நாள் காலத்தில் தான் அவனின் வரலாறு எழுதப்படுகிறது. அந்த தனி மனிதன் வரலாறே ஒரு இனத்தின் வரலாறாகிறது.

அந்த வழியில்தான் திருச்செல்வம் என்ற ஜங்கரனின் ஆளுமைகள் எமக்கெல்லாம் வழிகாட்டி மரமாகிறது. அவன் வளர்த்த பாசறை பல விடயங்களில் கற்றுத்தந்தது. யாருக்கும் அடிமையாகாமல், யாரையும் அடிமையாக்காமல் தன் உழைப்பிலே தன் அந்திம காலம் வரைக்கும் வாழ்ந்ததுதான்! போர் பின்னடைவின் பின்னர் தமிழருக்கு உறுதியான் தலைமை இதுவரை இல்லை என்பது பெரும் குறையாகும். விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் எம்மையெல்லாம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் (கொண்டுவந்த) தலைமை இல்லாமையால் நாமெல்லாம் சிதறுகின்றோம். அடிமைப்படுத்தப்படுகிறோம். இனத்தின் தொன்மையும், வரலாற்றையும் தெளிவாக அறிந்த தலைமைகளின் கீழ் நாமில்லை. எமது ஓர்மம் குன்றிப் போய் அடிமை வாழ்வு வாழ்வதற்கு இதுவே பிரதான காரணம் என நான் எண்ணுகிறேன். இந்தப் பாதையை தன் பாதையாக ஜங்கரன் ஏற்றுக்கொள்ள தூண்டியது என உறுதியாக கூறலாம். நான் அவரோடு பழகியதில் கற்றுக் கொண்டதும் இவை தான்.

- ❋ தேசிய பற்று
- ❋ திருக்கோணமலை மண் பற்று
- ❋ அபிவிருத்தியும் ஏழைகளின் தொழில் வாய்ப்புக்களும்

என்பதை அவர் பெற்ற தலைமையிடமும், வளர்ந்த பாசறையிலும் பெற்றுக் கொண்டார்.

தன் இனம் தான் இந்நாட்டின் முதல் குடி என்பதை தெளிவாக, ஆதாரங்களோடு அறிந்திருந்தார். அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கற்பிக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமாகவும் இருந்தார். அதற்கு துறை சார்ந்த வல்லுனர்களை பயன்படுத்தினார். நாம் யாதென்பதையும், வரலாற்றையும் அறியாமல் எதிரிகளோடு மோதக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். அனைவரும் கல்வியூட்டப்படவேண்டும் என்பதில் குறியாக இருந்தார் அதற்காக உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தது திருக்கோணமலை மண் பற்று

உலகத் தமிழரின் குறியீடு தான் திருக்கோணமலை. இம்மண்ணில் இருந்து தமிழரின் தொன்மை அழியுமாக இருந்தால் உலக தமிழர்களின் வரலாறும் இலகுவாக அழிந்துவிடும். இதனை நோக்காகக் கொண்டு திட்டமிட்டு எம் எதிரிகள் மிக புத்திசாலித்தனமாக திருக்கோணமலை மண்ணின் வரலாற்றை கபளிகரம் செய்கிறார்கள்.

இந்த அட்டவணைக்கு தெரிந்தும் தெரியாமலும் நாமும், நாம் வரிந்து கொண்ட தலைமைகளும் துணை போகின்றது என்ற உண்மையை கூறாமலிருக்கமுடியாது. இவற்றை தெளிவாக புரிந்து கொண்ட ஐங்கரன் தனது மரண காலம் வரைக்கும் தன்னால் இயன்றளவு பாடுபாட்டதை நான் அறிவேன்.

அடுத்தது. அவர் ஆளுமை செலுத்திய அபிவிருத்திப் பணிகளும் ஏழை மக்களுக்கான தொழில் முயற்சியும் அளவிடமுடியாதவை. அவரின் பாசறை அமைந்திருந்த இடங்களில் அவரால் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட புதிய பாதைகள் இன்றுவரை எமது கண்முன் விரிந்து கிடக்கிறது. பல துறைசார்ந்த அமைச்சர்களை தன் இடத்திற்கு வரவழைத்து அமைக்கப்பட்ட பாதைகள் இன்று வரை வரலாறாக உள்ளது. அவரால் அமைக்கப்பட்ட பாலர் கல்விக்கூடங்கள் அவர் நாமம் கூறுகிறது.

நாம் பெரிதாக எண்ணிக்கொண்ட அரசியல் தலைமைகளிடம் இல்லாத தூரநோக்கு திட்டமிடலும் ஐங்கரனிடம் நிரம்பியிருந்தது. அதற்கு ஓர் சிறிய உதாரணம். அரசியல் தலைமைகளின் தெரிவு. இன்று வரை அந்த தெரிவுகள் நிலைபெற்று வாழ்வதையும், அதற்கான முழுப் பொறுப்பும் ஐங்கரனையே சாரும்.

மரணம் அவரை வாங்கிக் கொண்டாலும். அவரின் ஆளுமைகள் இந்த மண்ணிலே தமிழ் வாழும் வரைக்கும் நிரந்தரமாக நிலை கொண்டிருக்கும். ஐங்கரன் பற்றி கூறியவை சில கலத்தின் தேவையும், நிலையும் கருதி முழுவதையும் கூறி விட முடியாது! கூடாது! எதிரிகளுக்கு நாமே பாதை வகுப்பது போலாகி விடும். அவரின் ஆளுமைகளை படைக்க காப்பியம் தான் உருவாக்க வேண்டும். மறக்கக்கூடாது. ஆளுமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசு கண்ணதாசனின் சிலவரிகள் அவருக்கு பொருத்தமாகும்.

“வாழ்ந்தவர் கோடி!,
மறைந்தவர் கோடி!
மக்கள் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரர்!
மானம் காத்தோர்!
சரித்திரம் தன்னில் நிற்கின்றார்!

ஜங்கரனின் இழப்பு ஒரு தேசத்தின், ஒரு இனத்தின் இழப்பாகும்.

இத்தேசிய இழப்பில் துயரும் அனைவருக்கும்,
அன்னாரின் குடும்பத்திற்கும் ஆறுதல் கூறுகிறோம்.

வாழ்க தமிழ் !

நன்றியுடன்,
கனகசபை தேவகடாட்சம்,
கொட்டியாபுரப்பற்று (மூதூர்)
0766669386

**தேடிச் சோறுநிதந் தின்று – பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்**
**வாடித் துன்பமிக உழன்று – பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து – நரை**
**கூடிக் கிழப்பருவ மெய்தி – கொடுங்**
**கூற்றுக் கிரையெனப் பின்மாயும் – பல**
**வேடிக்கை மனிதரைப் போலே – நான்**
**வீழ்வே னென்றுநினைத் தாயோ?**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லி எங்கு விழுந்தால், என்ன பலன்!

01. தலை – ஆண், பெண் இரு பாலாரது தலையில் பல்லி விழுந்தால் மோதல்கள் அல்லது மரண பயத்தை குறிக்கும்.

02. கண்கள் - இடது கண்ணில் என்றால் ஆண்களுக்கு நல்லது நடக்கும் பெண்களுக்கு துணையின் அன்பு கிடைக்கும், வலது கண் என்றால் ஆண்களுக்கு எதிலும் தோல்வி மற்றும் பெண்களுக்கு மன அழுத்தம் மேலோங்கும்.

03. உதடுகள் - மேல் உதட்டில் விழுந்தால் தீமை உண்டாகும். கீழ் உதட்டில் விழுந்தால் பெண்களுக்கு புதிய பொருட்கள் கிட்டும் ஆண்கள் நிதி லாபங்களை பெறுவர்.

04. பாதம் - வலது பாதத்தில் விழுந்தால் நோயால் கஷ்டப்படக்கூடும். இடது பாதத்தில் விழுந்தால் கெட்டது நடக்கும்.

05. மார்பு – நன்மை விளையும்

06. மணிக்கட்டு – வலது மணிக்கட்டில் என்றால் கெட்ட சகுணம். இடது மணிக்கட்டில் என்றால் அதிர்ஷ்டம்.

07. தோள்ப்பட்டை – வலது தோள்ப்பட்டையில் விழுந்தால் எதிலும் வெற்றி. இடது தோள்ப்பட்டை என்றால் பேரின்ப சேதி கூடம்.

08.கைவிரல்கள்-வலது கைவிரல்ககளில் விழுந்தால் பரிசைப்பெறுவீர்கள். இடது கைவிரல்களில் விழுந்தால் கவலைப்படக்கூடும்.

09. தொடை – கெட்ட சகுணம்

10. கழுத்து – கழுத்தின் வலது பக்கம் விழுந்தால் பகமை தொடரும். கழுத்தின் இடது பக்கம் விழுந்தால் வெற்றி கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வெற்றி பெற வீரத்துறவி கூறும் விவேக வரிகள்...

ஒரு மனிதன் எடுத்த எல்லா காரியங்களிலும் வெற்றிகளைப் பெறுவதற்கு சில வழிகளை பின்பற்ற வேண்டும் என்று வீரத்துறவி விவேகானந்தர் போதித்துள்ளார். அந்த வழிகளாவன:

- பட்டினி கிடக்காதீர்கள்
- மிக அதிகமாக உணவு உண்ணாதீர்கள்
- சோம்பலைத் துரத்தி அடியுங்கள்
- சந்தேகமும், சஞ்சலமும் எதிரிகள். அவற்றை அண்டவிடாதீர்கள்.
- அதிக நேரம் உறங்காதீர்கள்
- மிக குறைவாகவும் உறங்காதீர்கள்.
- பொறாமை அறவே இருக்கக்கூடாது.
- உடல் தூய்மை அவசியம். ஆகையால் தினமும் நீராடுங்கள்.
- பேராசைப் படாதீர்கள்.
- மகிழ்ச்சியாக இருங்கள்.
- நல்லதையே நினைத்து வாருங்கள். நல்லவையே நடக்கும். நினைக்கும் பொருளாகவே ஆகும் தன்மை நம்மிடம் உண்டு.
- தைரியமாக இருங்கள்.
- பொறுமையும், விடாமுயற்சியும் நல்ல நண்பர்கள். எப்போதும் இவர்களுடனே இணைந்திருக்கப் பழகுங்கள்.

**********

## சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடச் சொல்வது ஏன்?

முதலில் நம் முன்னோர்கள் இப்படி சம்மணமிட்டு சாப்பிட்டதின் நோக்கமென்ன? சாப்பிடும்பொழுதாவது நாம் காலை மடக்கி அமர்ந்து தான் சாப்பிடவேண்டும். சாப்பிடும்பொழுது காலைத் தொங்கவைத்து அமர்வதனால் ரத்த ஓட்டம் வயிற்றுப்பகுதிக்கு செல்லாமல் காலுக்கே அதிகமாகச் செல்கிறது. எனவே ஜீரணம் தாமதமாகிறது. காலை மடக்கி சுக ஆசனத்தில் அமர்ந்து சாப்பிட்டால் சாப்பிட சாப்பிட சாப்பாடு ஜீரணமாகிவிடும். ஏனென்றால் கீழே ரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப்பகுதிக்குச் செல்லும் பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது. எனவே தான் சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடும்படி வலியுறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம விமோசனம் (அபரக்கிரியை)

## மரணக்கிரியை

உடலை விட்டு உயிர் பிரிந்து இறந்த இந்துக்களிற்கு செய்யப்படும் கிரியை இது ஆகும். இதில் மூன்று பகுதிகள் உண்டு (1) பேரிகையடித்தல் (2) சரீரசுத்தி (3) ஆன்மசுத்தி யாகும் சரீரத்தைச் சுத்தி செய்வன அபிஷேகமும் சிவாக்கினியாற் சுடுதலுமாம் ஆன்ம சுத்திக்காக அந்தியேட்டி செய்யப்படும்.

## சுண்ணம் இடித்தல்

உரலில் பூமாதேவியையும் உலக்கையில் மேருமலையையும் பூசித்து அறுகு, மஞ்சள்மா உரலில் இட்டு எண்பத்தொரு பதமந்திரம் சொல்லி மூன்றுதரம் இடித்து பின்பு திருவாசகத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப் பாடல் பாடி இடித்தல் வேண்டும் பஞ்சபுராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப் பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்திலுள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து பிரேதத்திற்கும் திலகமிட்டு பிரேதத்தின் இரு கண்ணிலும் சாத்தி உடல்முழுவதிலும் தெளிப்பார்கள் மனைவி மக்கள் பிரேதத்தின் காலில் பூப்போட்டு வணங்குவார்கள் மனைவி மக்கள் சுற்றத்தார் இடப்புறமாகச்சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவார்கள் அங்குள்ளவர்களுள் வயது முதிர்ந்த சுமங்கலி முதலில் வாய்க்கரிசி இடுதலும் இறுதியில் இறந்தவரின் மனைவியும் வாய்க்கரிசி இடுவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும் சுமங்கலி இறந்தால் நிறைதாழி (தீபம், நெல், நிறைந்த கொத்தைப்) பிரேதத்தின் கையில் தொடச்செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றை முந்தானையில் முடிச்சு விடவும்.

## காடாற்றுதல் (அஸ்தி சஞ்சயனம்)

தகனம் செய்த மறுநாள் காடாற்றுதல் என்ற பெயரில் சைவர்களும் சஞ்சயனம் என்ற பெயரில் வைதிகர்களும் எலும்பு, சாம்பல் பொறுக்கும் கிரியையைச் செய்வர். எரிக்கப்பட்ட அவ்விடம் அடுத்தநாள் அஸ்தி சஞ்சயனம் வரைக்கும் சூடாக இருக்க வேண்டும். அச்சூட்டைத் தணித்தல் என்பதே தமிழர் வழங்கும் "காடாற்று" எனும் சொல்லாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டுச்செலவு (கல்லெடுப்பு அல்லது பாஷாணோத்தாபணம்)

இது தேசவழமையில் உள்ள கிரியை ஆகும் இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவைகருதி ஐந்தாம் நாளிலும் செய்யப்படும். இறந்தவர் விரும்பி உண்ட உணவினை சமைத்து படையல்படைத்து அவ் உணவின் சிறு பகுதியினை எடுத்து தீப்பந்தத்துடன் முச்சந்தியில் வைப்பது வழக்கம் இவற்றை பூதபைசாசுகள் உண்ணும் என்பதும் ஐதீகம் எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்து உணவு வகை தயாரிப்பதில்லை.

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாக செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசார அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும். அந்தியேஷ்டி அசௌச முடிவில் 31ம் நாளில் செய்யப்படும. இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால். அந்தியேஷ்டி (தர்ப்பை சுடுதல்) நாட் பார்த்து தான் செய்ய வேண்டும். நத்தை. பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளும் செவ்வாய். வியாழன். வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும் திரிபாத நட்சத்திரங்கள் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (காலவிதானம்) நத்தை - பிரதமை. ஷஷ்டி. ஏகாதசி, பத்ரை துதியை, ஸப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம் கார்த்திகை உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம் பூரட்டாதி) 26ஆம் நாளுக்கு மேல் 31ஆம் நாள் வரையில் செய்யலாம்.

சுடலை. ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரகரை வீடு (கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேட்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டவதிற்கு பதினாறு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். விதானம். தோரணம். பூமாலைகளால் அலங்கரித்து மேலே வெள்ளை கட்டி நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து தெற்கால் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும் வேண்டும் மிகுதிக் கிரியைகள் ஆசாரியாரால் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபிண்டீகரணம்

வீட்டு கிரியையைப் பொதுவாக சபீண்டிகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு ஏகாதிட்டம், பதினைந்து மாசிமகம், சோத கும்பசிராரத்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபீண்டீகரணம் செய்ய வேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யதக்கது எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களை கருதி அசௌகம் நீங்கிய மறு தானத்தில் செய்யலாம். இதிலே நான்கு பதிகளுண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் - நந்திதேவர், மகாகாளர் (விசுவதேவர்)
2. பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர், கணாதீசர்
3. அதிதி அப்பியாகதர் இருவர் - முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்.
4. நிமிர்த்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்.

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது ஒவ்வொரு பகுதிக்கு ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர் தேவருக்கு ஒருவராக இருவரையேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும் போது புயங்களில் விசுவ தேவரையும், தோளுச்சியில் பிதிர்தேவர்களையும பூசிக்கலாம்.

இவர்களை சகல உபசாரங்களும் செய்து வீட்டினுள் அழைத்து வந்து தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர் அதிதி அப்பியாகதரை கிழக்கு முகமாகவும், பிதிர் தேவர்களை வடக்கு முகமாகவும் நிமிர்த்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து தேவ பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளும் இட்டுப் பூசிக்கவும், பூணூலை வலமாக இட்டு விசுவதேவரை பூசிக்க வேண்டும் நிமிர்த்தரையும் பின் அதிதி அப்பியாகதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி, தானம், தட்சணை கொடுக்கவும்.

அவர்கள் முன் சாணியால் மெழுகி வாழை இலையில் தெற்குநுனியாகத் தர்ப்பை வைத்து எள்ளு சிதறி கர்த்தா தெற்கு நோக்கி இடது முழந்தாள் இடக்கையை ஊன்றி வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர்வர்க்க 3 பிண்டமும், 2வது வரிசையில் மாதுவர்க்க 3 பிண்டமும் கிழக்கில் 3வது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமிர்த்தல்) குறித்து 1 பிண்டமிடுக. நிமிர்த்த பிண்டம் சற்று நீண்டதாய் நுனி வளைந்து மற்ற பிண்டத்தை தீண்டுவதாய் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்ட மேற்கே அன்னம் கறிவகை, தயிர், பாயாசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கை படைக்கவும். இளநீரை வெட்டி திறந்து வைத்து பின் தூபதீபம் காட்டி வழிபாடு செய்க. கர்த்தாவும் உறவினரும் பூவும் நீருமிட்டு வழிபட்டபின் திருமுறை பாடி சரமகவி பாடி தர்ப்பணம் செய்க. பின் சகல பிதிர் தேவரையும் உத்வாசனம் செய்து பிண்டத்தை பசுவிற்கு கொடுக்கவும் அல்லது சமுத்திரத்தில் விடவும்.

வடக்கு தெற்காய் 3 பாத்திரமும் கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து அவற்றுள் அர்க்கிரயம் (நீர், சந்தனம், எள்ளு, தர்ப்பை, நுனி, பூ) இட்டு 3 பாத்திரத்துள்ளும் பிதிர் தேவரையும் தனிப் பாத்திரத்தில் நிமிர்த்தரையும் பூசித்து நிமிர்த்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தைப் பிதிர்தேவர்க்குரிய 3 பாத்திரத்திலுள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சமயோசனம் ஆகும். பின் குருவிற்கு தட்சணை கொடுத்து ஆசீர்வாதம் பெற்றபின் குரு கர்த்தாவிற்கு மஞ்சள் திலகமிட்டு அதன் மேல் அட்சதை வைப்பர். அதன்பின் குருவை வீட்டு வாசல்வரை சென்று வழி அனுப்பி உறவினர் நண்பருடன் உணவு உண்ணவும்.

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 5 நட்சத்திரத்தில் இறந்தால் தோஷமுண்டு இதற்கு சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூரணகும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை 3 நாள், 2 நாள் ஒரு நாளாவது வைக்க வேண்டும். நீற்றுபூசணிக்காய் கட்டல், வீட்டில் உள்ளவர் கையில் நூல் கட்டல் முதலியன நடைமுறையிலுள்ள வழக்கம்.

## மஹாளயம்

இது ஒரு பொது சிரார்த்தம் ஆகும். இது மஹாளயம் எனப்படும். புரட்டாதி மாத அபரபக்க பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மஹாளய பட்சம் ஆகும். சூரியன் தெற்கு நோக்கி சஞ்சரிக்கும் தெட்சிணாயன கால நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம் சந்திரனும் தெற்கு பக்கமிருக்கும் எனவே இக்காலம் பிதிர்கருமத்திற்கு ஏற்றதாய் கொள்ளப்படும்.

ஒருவர் இறந்த தினத்தில் இவருக்கு திவசம் செய்ய வேண்டும். இறந்த தினம் தெரியாவிடின் அம்மாதம் வரும் அமாவாசையில் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிடில் மஹாளய பட்சத்தில் செய்யலாம். சிரார்த்தம் செய்ய தவறியவர் மஹாளய பட்சத்தில் கண்டிப்பாய் பிதிர்கருமம் செய்ய வேண்டும். மஹாளயப் பட்சம் முழுவதும் பிதிர்கருமம் செய்தால் வருடமுழுமையும் செய்த பலனும் பிரதமையில் செய்தால் தனமும், துவிதியையில் செய்தால் பிரஜாலாபமும் திருதியையில் வளர்ச்சியும், சதுர்த்தியில் சத்துரு நாசமும் பஞ்சமியில் சம்பத்தும். சஷ்டியில் புகழும், சப்தமியில் கணாதிபத்தியமும், அட்டமியில் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீ சம்பத்தும், தசமியில் இஷ்ட சித்தியும், ஏகாதசியில் வேத சித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், திரியோதசியில் பசுவிருத்தியும், சதுர்த்தசியில் புஷ்டியும், அமாவாசையில் தீர்க்க ஆயுளும் கிடைக்கும். இயந்திரங்களால் இறந்தவர்க்கு சதுர்த்தசியிற் செய்வது சிறப்புடையது.

மஹாயள பட்சத்தில் வரும் பரணி, அட்டமி, கஜச்சாயை என்பன (கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாதத்தில் மக நட்சத்திரமும் திரயோதசித் திதியும் சேர்ந்து வரும் நாளாகும்) புண்ணிய காலம் என்பதால் இக்காலத்தில் பிதிர்கருமம் செய்வதால் அதிக பலன் கிடைக்கும் என்பர்.

பிதிர்கருமம் செய்வதற்குரிய தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன கூறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் வீட்டில் அகல நீள பலாபலன்கள்

06 அடி நன்மை
07 அடி தீமை
08 அடி இராஜயோகம்
09 அடி நோயினால் நலிவு
10 அடி பாக்கியம்
11 அடி புத்திரர் இலாபம் நன்மை
12 அடி துயரம்
13 அடி துன்பம்
14 அடி கவலை
15 அடி துன்பம்
16 அடி செல்வம்
17 அடி எதிரிகள் அழிவர்
18 அடி நஷ்டம் வீடுபாழ்
19 அடி புத்திரர் கவலை
20 அடி இனம் சேரும்
21 அடி நன்மை
22 அடி பகைவர் அழிவர்
23 அடி தீமை
24 அடி இலாப நஷ்டம் சமம்
25 அடி மனைவி மரணம்
27 அடி அரசாளும்
28 அடி ஆயுள் விருத்தி
29 அடி பசு பாக்கியம்
30 அடி பிள்ளைப்பேறு
31 அடி நன்மை
32 அடி இழந்ததைப் பெறலாம்
33 அடி பல நன்மைகள்
34 அடி இட மாற்றம்
35 அடி இலட்சுமி கடாட்சம்
36 அடி அரச வாழ்க்கை
37 அடி பசு விருத்தி
38 அடி வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 அடி இராஜ சன்மானம்

40 அடி பகை ஏற்படும்

41 அடி செல்வந்தர்

42 அடி அஷ்டலட்சுமி

43 அடி நன்மையில்லை

44 அடி பார்வை இழக்க நேரும்

45 அடி செல்வ மிகுதி

46 அடி தரித்திரம்

47 அடி பொருள் நாசம்

48 அடி தீயினால் கேடு

49 அடி தரித்திரம்

50 அடி நன்மையில்லை

"ஆயிரம் தடவை அளவெடு ஒரு தடவை வெட்டு"

************

## வீட்டிலேயே மருத்துவம்

**காய்ச்சல் குணமாக**

* வேப்பிலையை வறுத்துச் சூட்டோடு தலைக்கு வைத்துத் தூங்கவும்.
* கோரைக்கிழங்கு கசாயம் குடித்தால் நல்லது.

**காய்ச்சல் குணமாக**

* துளசி அவித்துச் சாறு பிழிந்து குடித்துவர நீங்கும்.
* வல்லாரைப் பொடி. தூதுவளைப் பொடி பாலில் கலந்து குடித்துவர சளித்தேக்கம் நீங்கும்.

**இருதயம் பலம் பெற**

* அத்திப்பழத்தை காயவைத்து பொடியாக்கி ஒரு கரண்டி சாப்பிட்டு வரலாம்.
* இஞ்சிச்சாறு, எலுமிச்சைச்சாறு, தேன்கலந்து சாப்பிட மார்பு வலி நீங்கும்.

**மூட்டுவலி குணமாக**

* நொச்சி இலைச்சாறு, மிளகுதூள், நெய் சேர்த்துச் சாப்பிட மூட்டுவலி தீரும்.
* வேப்ப எண்ணெய், விளக்கெண்ணெய், தேய்காயெண்ணெய் மூன்றையும் கலந்து சூடாக்கித் தேய்க்கக் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்களும், ஆண்டுகளும்

- 1வது - கடதாசி
- 2வது - பஞ்சு / பருத்தி
- 3வது - தோல்
- 4வது - புத்தகம்
- 5வது - இரும்பு
- 6வது - மரம்
- 7வது - வெண்கலம்
- 8வது - உபகரணம்
- 9வது - பாளை
- 10வது - தகரம்
- 11வது - உருக்கு
- 12வது - பட்டு
- 13வது - சரிகை
- 14வது - தந்தம்
- 15வது - படிகம்
- 20வது - சீனக்களிமண்
- 25வது - வெள்ளி
- 30வது - முத்து
- 35வது - பவளம்
- 40வது - மாணிக்கம்
- 45வது - இந்திரநீலம்
- 50வது - பொன்
- 55வது - மரகதம்
- 60வது - வைரம், மணி
- 75வது - பவளம்
- 80 வது - அமுத
- 100வது - நூற்றாண்டு, தசர, சகாப்தம்
- 1000வது - மிலேனியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு தலைமுறை பாவங்களைப் போக்கும் பச்சரிசி தானம்

ஏழு தலைமுறைக்கு முன் செய்த பாவங்களும் இந்த தலைமுறையில் நீங்கள் தெரிந்து செய்த பாவங்கள், தெரியாமல் செய்த பாவங்கள், அறிந்து செய்த பாவங்கள், அறியாமல் செய்த பாவங்கள், வாயால் பேசிய பாவங்கள் அனைத்தும் தீருவதற்கு சனிக்கிழமையன்று பச்சரிசியை ஒரு கையில் அள்ளி நன்கு பொடி செய்து சூரியநமஸ்காரம் செய்து விட்டு விநாயகப்பெருமானை மூன்று சுற்று சுற்றிவிட்டு அந்த அரிசியை விநாயகரைச் சுற்றி போட்டால் அதை எறும்பு தூக்கிச் செல்லும். அப்படித்தூக்கிச் சென்றாலே நமது பாவங்களில் பெரும்பாலானவை நம்மை விட்டுப் போய்விடும்.

அப்படித் தூக்கிச்சென்ற பச்சரிசி மாவை எறும்புகள் தமது மழைக்காலத்திற்காக சேமித்து வைத்துக்கொள்ளும். எறும்பின் எச்சில் அரிசிமாவின் மீது பட்டதும் அதன் கெடும் தன்மை நீங்கி விடும். இந்த பச்சிரிசி மாவை சாப்பிடுவதற்கு இரண்டரை வருடங்கள் எடுத்துக்கொள்ளும். இப்படி இரண்டேகால் வருடங்கள் வரை எறும்புக்கூட்டில் இருப்பதை முப்பத்து முக்கோடி தேவர்கள் கவனித்துக்கொண்டிருப்பார்கள். இரண்டரை ஆண்டிற்கு ஒரு முறை கிரகநிலை மாறும். அப்படி மாறியதும், அதன் வலு இழந்து போய்விடும். இதனால் நாம் அடிக்கடி பச்சரிசி மாவினை எறும்புக்கு உணவாகப் போடவேண்டும். ஓர் எறும்பு அவ் அரிசிமாவை சாப்பிட்டால் 108 பிராமணர்கள் சாப்பிட்டதற்குச் சமம். இதனால் சனிபகவானின் தொல்லைகள் நம்மைத் தாக்காது.

## எந்த தெய்வத்தை எத்தனை முறை வலம் வரவேண்டும்?

நீங்கள் கோவிலுக்குள் சென்றால், எந்த தெய்வத்தை எத்தனை முறை வலம் வரவேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆனால் இன்றோ பெயரளவில் ஓரிரு முறை வலம் வருதல் அல்லது பொதுவாக, எல்லா தெய்வங்களையும் மூன்று முறை வலம் வருதல் என்று வழக்கமாகிவிட்டது. ஆனால் இது தவறு. ஒவ்வொரு தெய்வத்தையும் எத்தனை முறை வலம் வரவேண்டும் என்று கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விநாயகரை நீங்கள் வணங்கி அவரை ஒருமுறை தான் வலம் வரவேண்டும்.
- ஈஸ்வரனையும், அம்மனையும் வணங்கி 3 முறை வலம் வரவேண்டும்.
- அரச மரத்தை 7 முறை வலம் வரவேண்டும்.
- மகான்களின் சமாதியை 4 முறை வலம் வரவேண்டும்.
- நவக்கிரகங்களை 9 முறை வலம் வரவேண்டும்.
- சூரியனை 2 முறை வலம் வரவேண்டும்.
- தோஷநிவர்த்திக்காக பெருமாளையும், தாயாரையும் வணங்குபவர்கள் 4 முறை வலம் வரவேண்டும்.
- கோயிலுக்குள் ஆலய பலிப்பீடம், கொடிக்கம்பம் முன்பு தான் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கவேண்டும்.

## சூரிய நமஸ்காரத்தால் கிட்டும் பலன் என்ன?

- சூரிய நமஸ்காரம் செய்யும்போது சூரியனின் கதிர்கள் கண்களில் படுவதால் கண்கள் ஒளி பெறுகின்றன.
- வயிற்றின் தசைகள் அசைவதால் ஜீரண உறுப்புக்கள் சரியாக இயங்குகின்றன.
- உண்ட உணவு நன்கு செரித்து, நல்ல பசி உண்டாகும். உடல் ஆரோக்கியம் பெறும்.

## எப்படி உறங்குவது?

வெறுந்தரையில் படுத்தால் நாளடைவில் உயிர்ச்சக்தியானது குறைந்து உடல் பலம் இழக்கிறது. எனவே உறங்கும் போது உடலில் உயிர்ப்புறும் சக்தி நிலத்தில் இறங்காமல் இருக்க ஒரு துணியையாவது விரித்தே படுக்க வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். இதனை இலக்கியங்களும், ஜைனர் குகைக்கோவில் படுகைகளும் நிறுவுகின்றன. நம் உடல் நலம் கருதி அமைந்த இந்த சாஸ்திர வழக்கங்கள் அறிவியல் ரீதியானவையே. எனவே குளிர்ச்சியாக இருக்கிறது என்று வெறும் தரையில் படுத்து உறங்குவது ஆபத்தானது என்று கூறியுள்ளனர் முன்னோர்கள்.

## விரல்களின் முத்திரையில் வியாதிகள் தீரும்

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம் என பஞ்ச பூதங்களை உள்ளடக்கியது இந்த பிரபஞ்சம். இதில் ஓர் அங்கமாக விளங்கும் நமது உடலும் இந்த பஞ்ச பூதங்களால் ஆனவையே. இந்த ஐந்து மூலங்களையும் உடலிலிருந்து பிரிக்க முடியாது. காரணம் மனிதனின் ஐம்புலன்களும் செயல்படுவதற்கு இந்த ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலகங்களே காரணமாக உள்ளன. இந்த ஐந்து மூலங்களும் உடலில் சமனநிலையில் இருந்தால் நமது உடல் மற்றும் மன ஆரோக்கியம் தொடர்ந்து சிறப்பாக இருக்கும்.

## ➢ விரல்களும் மூலகங்களும்

கட்டை விரல் - நெருப்பையும், சுட்டுவிரல் - காற்றையும், நடுவிரல் - ஆகாயத்தையும், மோதிரவிரல் - நிலத்தையும், சுண்டு விரல் - நீரையும் குறிக்கின்றன.

## ➢ சிந்தனை சக்தி

தியானம் செய்பவர்கள் சுட்டுவிரல் கட்டைவிரலைத் தொடும்படி வைத்துக்கொண்டு தியானம் செய்வார்கள். இதே நிலையில் இருபது நிமிடங்கள் கண்மூடி அமர்ந்தால் மூளையின் சக்தி அதிகரிக்கும். ஞாபகசக்தி, ஒருமுகப்படுத்தும் கவனம் முதலியவை அதிகரிக்கும். தூக்கமின்மை, டென்ஷன் முதலியவை அகலும். மன அமைதி கிடைக்கும்.

## ➢ மூட்டுவலி குணமாக வாயுமுத்திரை:

மூடடுவலி, இரத்த ஓட்டக் குறைபாடு, வாயுத்தொந்தரவு, செரிமானக் கோளாறு உள்ளவர்கள் சுட்டுவிரலைக் கட்டை விரலின் அடியைத் தொடும்படி வைத்துக்கொண்டு கட்டைவிரல் லேசாகச் சுட்டுவிரலை அழுத்தும்படி வைத்துக்கொள்ளவும். இதன்படி தியானம் செய்தால் வலிகள் குணமாகும்.

## ➢ காது நன்கு கேட்க:

காதில் வலி என்றால் கட்டைவிரலால் நடுவிரலைமடக்கி அழுத்திக் கொண்டு உட்காரவும். 40 நிமிடங்கள் இதுபோல் அமர்ந்தால் காதுவலி பறந்து போகும். காது கேளாதவர்கள் இந்த (Shunya) ஷுன்ய முத்திரையைத் தொடர்ந்து செய்து வந்தால் காது கேட்க ஆரம்பிக்கும்.

## ➢ சுறுசுறுப்பாக வாழ பிருதிவி முத்திரை

மோதிர விரலைக் கட்டை விரல் நுனியின் மேல் வைத்துக்கொண்டு இருபது நிமிடங்கள் தியான நிலையில் அமருங்கள். அவ்வளவுதான். தேவையான ஒக்ஸிஜன் கிடைத்துவிடும். உற்சாகமும் புதுப்பிக்கப்பட்டுவிடும். மதிய உணவுக்கு முன்பு இந்த முத்திரையை செய்து விட்டுச் சாப்பிட்டால் அதன் பிறகு வரும் பொழுதுகள் சுறுசுறுப்பான செயல் நிறைந்த நாளாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ➢ இரத்தம் சுத்தமாக வருணா் முத்திரை

இரத்தம் சுத்தமாகவும், தோல் நோய்கள் குணமாகவும், தோல் மிருதுவாக மாறவும் சுண்டு விரல் நுனியையும் கட்டைவிரல் நுனியையும் ஒரு சேர வைத்துக் கொள்ளவும். வருணா் முத்திரை என்று இதற்குப் பெயர். இரைப்பை குடல் சார்ந்த கோளாறுகள், உடலில் நீர் வற்றல் போன்ற கோளாறுகளையும் இந்த முத்திரை குணமாக்கும்.

## ➢ கொழுப்பு கரைய சூரிய முத்திரை:

உடலுக்குத் தேவையான வெப்பம் கிடைக்கவும் செரிமானம் நன்கு நடக்கவும். உடலில் கொழுப்பு அளவு குறையவும் சூரிய முத்திரை உதவும். மோதிர விரலை மடக்கி அதன் மேல் கட்டை விரலை வைத்து அழுத்திக்கொண்டு தியான நிலையில் அமரவும்.

## ➢ கண்ணாடியைத் தவிர்க்க பிராண முத்திரை:

நம் உடலில் மின்சாரம் பாய்வதை உணர இந்தப் பிராண முத்திரை உதவும். பிராண முத்திரை செய்தால் நரம்புத் தளர்ச்சி, சோர்வு முதலியன அகலும். கண்ணாடி இன்றிச் சிறந்த கண்பார்வை பெற வாய்ப்பு அதிகரிக்கும். இதற்காகக் கட்டை விரல் நுனியைச் சுண்டுவிரல் மற்றும் மோதிரவிரல் நுனிகள் தொடுமாறு வைத்துக்கொண்டு தியான நிலையில் அமரவும். பார்வைத் திறன் அதிகரிக்கும். எல்லா வயதுக்காரர்களும் தியான முத்திரையை மேற்கொள்ளலாம். பிறகு உங்கள் வியாதிக்குரிய முத்திரையைச் செய்ய வேண்டும். தினமும் காலையில் இருபது நிமிடங்கள் உங்களுக்கு உரிய முத்திரையைத் தேர்வு செய்து தியான நிலையில் அமருங்கள். நன்கு இழுத்து மூச்சை உள்ளேயும் வெளியேயும் விடுங்கள். மந்திரங்களோ வேறு சொற்களோ தேவையில்லை. இதனால் நோய்கள் குணமாவதுடன் உடலில் எதிர்ப்புசக்தி வளரும். மனவளமும் ஆரோக்கியமாகத் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிச் சடங்கு நடைமுறை விளக்கம்

## உயிர் பிரிகின்ற வேளையில் செய்யப்படுவன.

உயிர் உடலை விட்டுப்பிரிகின்ற வேளை உடனிருக்கும் குடும்பத்தவர் அல்லது உறவினர் அழுது குழறாது அமைதியாக இருந்து தேவார திருவாசகம் ஓதுதல் தொண்டை வறளாமல் இருப்பதற்காகப் பால் பருக்குதல் திருநீறு பூசுதல் முதலியன செய்தல் வேண்டும்.

உடலை உயிர் விட்டுப் பிரிகின்ற வேளையில் உயிருக்குச் சற்றுக் கலக்கம் ஏற்படும். ஐம்பொறிகளையும் விட்டு (மெய், வாய், கண், மூக்கு, செவி) புலன் ஐந்தும் அடங்கும் போது தனிப்பட்ட ஒரு அனுபவமும், தடுமாற்றமும், தாங்கொணா வருத்தமும், உயிருக்கு ஏற்படுகின்றது. இந்த வேளையில் அருகில் இருப்போர் கூச்சல் இட்டு அழுது குழறினால் உயிருக்கு மேலும் தடுமாற்றமும் குழப்பமும் ஏற்படும் இதனாலேயே அமைதியாக இருந்து இறை சிந்தனைக்கு உரிய செயல்களைச் செய்யும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. தேவார திருவாசகங்களை ஓதும் போது பிரிகின்ற உயிருக்கும் உடன் இருப்போருக்கும் அமைதியும் இறை சிந்தனையும் உண்டாகின்றது.

## இறந்தவரின் உடலை தெற்கே தலை இருக்கும் படி கிடத்துதல்

வடக்கு திசையில் தலைவைத்துப் படுத்தல் உடலுக்குக் கெடுதல் ஏற்படும். என்ற நம்பிக்கை உண்டு. இறந்தவரின் தலை வடக்கே இருக்குமாயின் உடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டு உடல் விரைவாகப் பழுதடைந்துவிடும் என்பதற்காகத் தெற்கே தலை இருக்க வேண்டும் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

## உடல் விறைப்பதற்கு முன் செய்யப்படுவன.

உடலின் வாயும் கண்ணும் மூடப்பட்டு இருக்கின்றனவா என்றும் கால் பெருவிரல்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றனவா என்றும் (கால்கள் இடந்து பிடித்த நிலையில் இல்லாதிருப்பதற்காக) உறுதிப்படுத்திக் கொள்ளுதல். கட்டுப் பற்கள் உடையோரின் பல்வரிசை வாயில் போடப்பட்டு இருக்கின்றதா என்றும் உறுதிப்படுத்தல். இவை உயிர் நீங்கிய உடனே செய்யப்பட வேண்டியன. உடல் சூடாறி விறைத்து விட்டால் பின்னர் இவற்றை இலகுவாகச் செய்ய முடியாது. அதனாலேயே உடனே செய்ய வேண்டும் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் மருத்துவ மனைகளும் இறுதிச் சடங்குகளை நடத்த உதவுகின்ற நிலையங்களும் இருக்கின்றன. அவை இவற்றைக் கவனித்துக் கொள்ளும். இருப்பினும் அப்படி உடன் இல்லாத இடத்து குடும்பத்தில் உள்ள எவரும் இவற்றைச் செய்யலாம்.

## உடலை வெள்ளைச் சீலையால் மூடி வைத்தல்.

உடலை ஈ, எறும்பு முதலியன அணுகாமல் இருப்பதற்காக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை மூடிவைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

## உடலின் தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றுதல்

தற்காலத்தைப் போல் முற்காலத்தில் மின் விளக்குகள் இருக்கவில்லை குத்து விளக்குகளே ஒளி தந்தன. உடலின் முகத்தைத் தெளிவாகப் பார்பதற்கே முற்காலத்தில் தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இக்காலத்தில் கலாசார முறையில் இந்த வழக்கத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். மேலும் இறைவன் ஒளிவடிவானவன் அந்த ஒளியை ஏற்றி வைக்கும் போது இறைவன் அங்கே கூட இருக்கிறான் என்ற நம்பிக்கையாகவும் இருக்கலாம்.

## தேவார திருவாசகங்களை ஓதல்

உயிர் பிரிகின்ற நேரத்தும், பின்னர் இறுதிச் சடங்குகள் நிறைவு பெறும்வரையும் அதன் பின்னரும் குடும்பத்தவரோ, நண்பர்களோ யாராயிருப்பினும் திருமுறைகள் ஓதலாம். ஒலி நாடாக்களை உபயோகிப்பதில் தவறில்லை. நேரடியாகப் பாடுவது உத்தமம். பாடப்படும் திருப்பாடல்கள் இறப்புடன் தொடர்பான பாடல்களாக இருத்தல் நல்லது. பஞ்ச புராணவைப்பு முறையைப் பின்பற்றி ஓதிய பின்னர், திருப்புகழ், பட்டினத்தடிகள் பாடல்கள் முதலிய பாடல்களை ஓதலாம். இசையோடு பாடவேண்டும் என்ற நியதி இல்லை பயபக்தியோடு ஓதினால் போதுமானது.

## வாய்க்கரிசி இடுதல்

இந்தச் சடங்கைப் பலர் பிழையான விளக்கத்துடன் செய்கிறார்கள். அதாவது இறந்தவருக்கும் தாம் உணவு ஊட்டுகின்றோம் என்ற எண்ணத்துடன் செய்கிறார்கள். பிரேதமானது சிவமாக்கப்பட்டு மலநீக்கம் செய்யப்படும் வேண்டுதல் செய்யப்பட்டு, உயிரை உலகப் பிணிப்புகளை நாடாதே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரப்பட்டபின் நாம் நமது உறவினருக்கு உணவு ஊட்டுகிறோம் என்ற நினைப்போடு இச்சடங்கைச் செய்வது பொருத்தமாகாது. அப்படி என்றால் ஏன் வாய்க்கரிசி இடும் வழக்கம் வந்தது என்ற கேள்வி எழலாம்.

ஆதி காலத்திலும் கிராமங்களில் இன்றும், வாய்க்கரிசி இடுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள் அரிசியல்ல. நெற்பொரியே ஆகும். இதில் ஒரு பெரிய தத்துவம் அடங்கி உள்ளது. அதாவது நெல்லானது விதைபொருள், அதனை விதைத்தால் முளைவிட்டு மீண்டும் வளர்ந்து பயிராகும். அத்தன்மையான நெல்லை வறுத்துப் (பொரித்து) பொரியாக்கிவிட்டால் அந்த நெற்பொரி மீண்டும் முளைக்கப்போவதில்லை. இந்த உண்மையைப் பாவனையாக வைத்துத் தான், இறந்துபட்ட உயிர் மீண்டும் பிறவாது இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் நெற்பொரியை இடும்போது, எம்மை விட்டுப் பிரிந்த இந்த உயிரானது மீண்டும் பூமியில் பிறவாதிருக்க அருள்புரிவாய் இறைவா என்ற வேண்டுதலோடுதான் இச்சடங்கினைச் செய்தல் வேண்டும்.

இதற்கு இன்னும் ஒரு பொருள் கொள்ளலாம். உயிரை ஒளிபெற விடாது மறைப்பன, ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்கள் நெல்லிலே மேலே மூடியிருக்கின்றன. உமிமை ஆணவத்துக்கும், உள்ளே அரிசியை மூடியிருக்கின்ற தவிட்டை கன்மத்துக்கும், உள்ளே அரிசியாய் இருக்கும் மாப்பொருளை மாயைக்கும் ஒப்பிடலாம். நெல்லைச் சிவனருள் என்கின்ற நெருப்பிலே வறுக்கின்றபோது, விளைவை உண்டுபண்ணுகிற உமியும், தவிடும், அரிசியும், வெந்து தூய்மையான வெண்ணிறமான பொரியாகி மீண்டும் பிறவாமை எய்த வேண்டும் என்பதே இச்சடங்கின் உட்கருத்தெனக் கொள்ளலாம்.

நெல்லைப் பொரியாக்குவதும், பட்டணங்களில் நெல்லைப் பெறுவதும் சிரமமான வேலை. ஆகவே இலகுவில் பெறக்கூடிய அரிசியை நெற்பொரிக்குப் பதிலாப் பயன்படுத்துகிறார்கள். அரிசியும், மீண்டும் முளைக்க முடியாத பொருள் என்பதை மனதில் கொண்டால் அரிசியை உபயோகம் செய்வதில் தவறில்லை. இந்தச் சடங்கில் இறந்தவரின் மிக நெருங்கிய உறவினர்களே கலந்துகொள்வர். வாய்க்கரிசி இட்டவர்கள் 31 நாள்வரை கடைபிடிக்க வேண்டிய துக்க நடைமுறைக் கடமைகள் சில உண்டு. அந்தக் கடமைகளை நிறைவேற்ற வசதியில்லாதவர்கள் இச்சடங்குகளில் கலந்து கொள்வது வழக்கம் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டி மூடப்படுதல்

கிராமங்களிலும் முற்காலத்திலும் வீட்டிலே மூடப்பட்ட பெட்டி சுடுகாட்டிலே திறக்கப்பட்டது. அங்கேதான் ஆண்கள் வாய்க்கரிசி இடுவார்கள். உடலில் உள்ள ஆபரணங்கள் அங்கேதான் அகற்றப்பட்டன. இவை நடந்தபின் தான் கொள்ளிக்குடம் உடைக்கப்பட்டுத் தீ இடப்பட்டது. முற்காலத்தில் ஆண்கள் மட்டும் தான் சுடலைக்குப் போனார்கள். பெண்கள் போவது வழக்கம் அல்ல. தற்காலத்தில் இந்த வழக்கம் மாறிவிட்டது. பட்டணங்களிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் சுடலைகள் காடுகள் அல்ல. நவீன சாதனங்களும், மண்டபங்களும் இருக்கின்றன. ஆகவே ஆண், பெண் இருதரப்பினரும் சுடலைகளுக்குச் செல்கிறார்கள். எனவே, தீயிடுவதைத் தவிர்ந்த உடலோடு தொடர்பான சகல சடங்குகளையும், வீட்டிலேயே வைத்துவிடுவது வசதியும், சிறப்பும் ஆகும். ஆகவே பெட்டிமூடுவதற்கு முன்னர், உடலில் உள்ள நகை, நட்டுக்களைக் கழற்றி விடுவது நல்லது. இதில், கழற்றப்படும் பொருட்களை அதற்கு உரியவர்களிடம் ஒப்படைப்பது கழற்றுகிறவரின் பொறுப்பு.

இவ்விடத்தில் ஒரு குறிப்புக் கூறவேண்டி உள்ளது. அதாவது திருமணமான தம்பதியரில் கணவன் இறந்தால் மனைவி தனது கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றிக் கணவரின் உடலின் நெஞ்சின்மேல் வைக்கும் ஒரு வழக்கம் உண்டு. இது உடற் சுத்தி செய்தபின் நிகழ்வது. பெண்கள் தாலியை அணிவது திருமணமானவர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கே. முற்காலத்தில் திருமணத்தன்று கணவனால் கட்டப்பட்ட தாலியை எக்காரணம் கொண்டும் கழுத்தைவிட்டுக் கழற்றுவதில்லை. கணவன் இறந்தபின் அவனாற் கட்டப்பட்ட தாலியை அணிவதற்குத் தகுதியற்றவள் என்று கருதப்படுகிறது.

எனவே கணவன் இறந்தவுடன் பெண் தன் கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றிவிடுகிறாள். தாலி அணியும் நிலை அற்றுப்போய் விட்டதே என்ற துக்கத்தில் அவன் அணிவித்த தாலியைக் கழற்றி அவன் உடலில் வைக்கிறாள். இந்தச் சடங்கை, பின்னர் பெண் திருமணம் செய்து கொள்வாளோ அல்லது தனித்தே வாழ்க்கை நடத்துவாளோ என்பதைக் காட்டுகின்ற அறிகுறியாக எடுக்கக்கூடாது. தாலியின் பெருமையைக் காட்டுகின்ற ஒரு சடங்காகவே கொள்ள வேண்டும். பின்னர் திருமணம் செய்துகொள்வதா, விடுவதா என்ற தீர்மானத்தை இதிலே போட்டுக் குழப்புவதும் உண்டு. அது தேவை அற்றது. தாலி கணவன் மனைவியரின் பிணைப்புக்கு நீக்கமற நிறைந்த ஓர் அத்தாட்சி, அடையாளம். அந்த அடையாளத்தின் சிறப்பு, என் வாழ்வில் இக்கணவனுடன் அவன் இறக்கும்வரை நிலைத்திருந்தது என்பதை வெளிப்படுத்தும் ஓர் நிகழ்வாக எடுத்துக் கொள்வது உத்தமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயிடும்போது, நகைகள் இருத்தல் ஆகாது

உடலுக்குத் தீயிடும்போது உடலிலே எந்தவித நகைகளும் இருக்கக்கூடாது என்ற நம்பிக்கை உண்டு. சிலர் சில நகைகளைக் கழற்றாமல் விட்டுவிடுகிறார்கள். அது இறுதிச் சடங்குகளின் உட்கருத்துக்கு மாறான செயலாகும். ஆசைகளை விட்டுவிடல், அனைத்தையும் துறந்த நிலை என்பவற்றை ஒப்பனையாகக் கொண்ட சடங்குகளைச் செய்துவிட்டுப் பின்னர் நகைகளைக் கழற்றாமல் விட்டுவிடுவது சரியல்ல, அதனால் தான் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம். எனவே இந்த நம்பிக்கையைக் கடைப்பிடிப்பது உத்தமம்.

## இறந்தவரின் ஆவிக்குப் பயப்படுதல்

இறந்தவரின் ஆவி நமக்குத் துன்பம் செய்யுமோ, கேடுவிளைவிக்குமோ என்று சிலர் பயப்படுவதுண்டு. இது அர்த்தம் அற்றது. ஆவி உடலில் இருக்கும் உயிருக்கு ஐம்பொறிகளின் துணை இல்லை. ஐம்புலன்களும் அதில் அமிழ்ந்திருந்தாலும், அது ஆவி நிலையில் இருக்கும்போது பூவுலகுக்கு உரிய தன்மை அதனிடம் இல்லை. அது ஆவி உலகையே நாடி நிற்கும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது மனப்பயத்தால் ஏற்படும் துன்பங்களை நாம் ஆவி துன்புறுத்துகிறது என்று எண்ணுகிறோம். ஆவி நிலையில் உள்ள உயிர்களை நாம் மண்ணுலகச் சூழலுக்கு இழுத்து ஈடுபடுத்தாமல் விட்டுவிட்டால் அவை நமக்குத் துன்பம் தரப்போவதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எமது சமூகத்திற்காக தன்னுயிர் ஈத்த அமரர் அழகரெட்ணம் திருச்செல்வம் (ஜங்கரன்) அவர்களின் மறைவுத்துயரறிந்து அன்னார் இறையடி சேர்ந்த நாள்முதல் இன்றுவரை தம் நிகழ்வு போன்று, கண்ணீர் சிந்தியும், பதாதைகள் கட்டியும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும், மலர்வளையம் சாத்தியும், அஞ்சலி உரையாற்றியும், இறுதி கிரியைகளில் கலந்தும், ஆறுதல் கூறியும், ஆகாரம் அளித்தும் குடும்பத்துடன் ஒன்றி உதவி ஒத்துழைப்பு நல்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் மற்றும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து ஆத்மசாந்தி வேண்டி பிரர்த்தனை செய்தோர்கள் கிரியைகளை செவ்வனே செய்தருளிய குருக்களுக்கும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டிலிருந்தும் தொடர்புகொண்டு துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இம் மலரினை குறுகிய காலத்தில் வடிவமைத்து அச்சிட்ட திருக்கோணமலை BEN VISION PRINTERS & PUBLICATION பதிப்பகத்தாருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன்

நான் வீழ்வேனென்று
நினைத்தாயோ...



"திக்குக்கள் எட்டும் சிதறி-தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து-வெள்ளம்
பாயுது பாயுது பாயுது-தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்-அண்டம்
சாயுது சாயுது சாயுது-பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று-தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட

வெட்டி யடிக்குது மின்னல்-கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்-கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா-என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய-மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பி வீரா!

அண்டம் குலுங்குது,தம்பி!-தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான்-திசை
வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்-என்ன
தெய்விகக் காட்சியை கண்முன்பு கண்டோம்!
கண்டோம் கண்டோம் கண்டோம்-இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்!"

– பாரதியார் –

BEN VISION PRINTERS
076 900 00 35
TRINCO

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org